**தலைமைப்பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., நீ.ஆ.து.,**
**திருச்சி மண்டலம் திருச்சி 20.**

Email Id : cetrydb@hotmail.com., Office Ph No: 0431-2331411., Fax No: 0431-2331148

முன்னிலை: பொறி.ச.இராமமூர்த்தி, பி.இ., எம்.பி.ஏ.,
தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து., பொ.ப.து.,

**செயல்முறை ஆணை எண்: சி2 / 2387 / 2019 / நாள்: 13.09.2019.**

பொருள்: பணியமைப்பு – பொ.ப.து - தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி **செல்வி.ச.சுகன்யா,(பி.தேதி:17.06.1990) - இளநிலை உதவியாளர், நீ.ஆ.து.,** மண்டல அலுவலகம், திருச்சி - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சென்னை அவர்களின் க.எண்: 1150 / PSD-H2 / 2019 / நாள்: 18.02.2019.
2. முதன்மை தலைமைப்பொறியாளர், (நீ.ஆ.து), பொ.ப.து, சென்னை அவர்களது செயல்முறை கடித எண்: எஸ்3(3) / 25366 / 2019 / நாள்: 25.02.2019.
3. இவ்வலுவலக செ.மு.க.எண்: சி2 / 2387 / 2019 / நாள்: 08.03.2019.

---

**ஆணை:-**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ல் நடத்தப்பெற்ற போட்டித்தேர்வில் (தொகுதி IV-ற்கானது) இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர் (நீ.ஆ.து.) சென்னை அவர்களது செயல்முறை ஆணையின் படி, இம்மண்டல அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட **செல்வி.ச.சுகன்யா**, இளநிலை உதவியாளரது பணி பார்வை 1 மற்றும் 2-ல் காணும் தேர்வாணையக் கடிதம் மற்றும் முதன்மை தலைமைப்பொறியாளரின் மேற்க்குறிப்பாணையின் பத்தி 6-ல் தெரிவித்துள்ளவாறு இப்பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது" என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியர் பணியில் சேர்ந்த நாளான 08.03.2019 மு.ப முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14 / 2016)-ன் பிரிவு 28-ன்படி கீழ்கண்ட நிபந்தனைகளுடன் தனியர் பணியேற்ற நாளான 08.03.2019 மு.ப முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். அப்பதவியில் தமது மூன்றாண்டுகால தொடர்பணியில் இரண்டாண்டு காலப்பணியினை திருப்திகரமாக நிறைவு செய்தல் வேண்டும்.

தகுதிகாண் பருவ காலத்தில் துறைத்தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தகுதிகாண்பருவம் துவக்கி ஆணை வழங்கப்படுகிறது.

தலைமைப்பொறியாளர், பொபது., சார்பில்,
நீஆது., திருச்சி மண்டலம், திருச்சி -20.

பெறுநர்:
செல்வி.ச.சுகன்யா,
இளநிலை உதவியாளர்,
மண்டல அலுவலகம்
திருச்சி.20.